**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். MC.2 /2023**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | முகமதுகனி | **ஜாதி:** | |
| **தகப்பனார் பெயர்:** | ஷேக்முகமது | **தொழில்:** | |
| **கிராமம்:** | அறந்தாங்கி | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | அறந்தாங்கி | **வயது :** | 74/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**
**29.04.2025**
**எதிர்மனுதாரர் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். இந்த ஜீவனாம்ச மனுவினை எனக்காக தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் நான் சொன்னவைதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ம.சா.ஆ.-1 முதல் ம.சா.ஆ.-14 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **ம.சா.ஆ.-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. எதிர்மனுதாரர் நடத்திவரும் நிறுவனத்தின் விசிட்டிங் கார்டு எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் **ம.சா.ஆ.-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. எதிர்மனுதாரரின் 10ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் சான்றொப்பமிட்ட ஆவணம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் **ம.சா.ஆ.-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. எதிர்மனுதரரின் கல்லூரி மாற்றுச்சான்றிதழ் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் **ம.சா.ஆ.-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. எதிர்மனுதாரர் அழகப்பா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டம் பயின்றதற்கான புரோவிஸ்னல் சான்றிதழ் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் **ம.சா.ஆ.-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. எதிர்மனுதாரரின் வீட்டின் புகைப்படம் **ம.சா.ஆ.-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. எதிர்மனுதாரர் அலுவலகத்தின் புகைப்படம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் **ம.சா.ஆ.-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. எதிர்மனுதாரரின் திருமண பத்திரிக்கை **ம.சா.ஆ.-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
9. மனுதாரர் மூலம் எதிர்மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஆவணம் **ம.சா.ஆ.-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
10. மனுதாரர் எதிர்மனுதாரர் மீது அறந்தாங்கி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் CSR மற்றும் மனு அலுவலக நகல் **ம.சா.ஆ.-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆட்சேபனை குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும் என்று ஆவணங்கள் தொடர்ச்சியாக குறியீடு செய்யப்பட்டது. ஆவணங்கள் குறியீடு செய்யப்படுவதற்காக முதல் விசாரணையில் தொடர்ச்சி மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பட்டுகிறது.